ISSN: 2582–5518




# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




திங்கள் ❖ ஆகஸ்ட். 07, 2023 புதுக்கோட்டை 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 304 ❖ ரூ.10

### தமிழின் சங்க இலக்கியங்கள் இந்தியாவுக்கு மிகப்பெரிய பொக்கிஷம்

# அடையாளம்

## பாலின சமத்துவத்தின் அடையாளமாக சென்னை பல்கலை. விளங்குகிறது ; குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு




சென்னை , ஆக.7–

" சென்னை பல்கலைக்கழகம் மற்றும் அதன் உறுப்புக் கல்லூரிகளில், ஒரு லட்சத்து 85 ஆயிரத்துக்கும் அதிகமான மாணவ, மாணவியர் படித்து வருகின்றனர். பாலின சமத்துவத்தின் அடையாளமாக சென்னைப் பல்கலைக்கழகம் திகழ்கிறது. சென்னைப் பல்கலைக்கழகம் கல்வியை மேம்படுத்துவதில், இந்தியாவுக்கு பெருமை சேர்த்து வருகிறது" என்று குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு கூறியுள்ளார்.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் 165வது பட்டமளிப்பு விழா நேற்று நடைபெற்றது. இந்த விழாவில், குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு கலந்துகொண்டு மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார். பின்னர், அவர் பேசியது: "சென்னைப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டதில் மகிழ்ச்சி. பதக்கங்கள் மற்றும் பட்டங்களை பெற்றவர்களுக்கும், பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் பல்வேறு துறைகளின் பேராசிரியர்கள், பணியாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழின் சங்க இலக்கியங்கள் இந்தியாவுக்கு மிகப்பெரிய பொக்கிஷம். திருக்குறள் அறிவுக்களஞ்சியமாக இருந்து வருகிறது. தமிழகத்தில் உள்ள கோயில்களும், சிற்பங்களும் தமிழகத்தின் கலை சிறப்பினை விவரிக்கின்றன. கலை, இலக்கியம் என கலாசாரம் நிறைந்த மாநிலமாக தமிழகம் திகழ்கிறது.

சென்னை பல்கலைக்கழகம் மற்றும் அதன் உறுப்புக் கல்லூரிகளில், ஒரு லட்சத்து 85 ஆயிரத்துக்கும் அதிகமான மாணவ, மாணவியர் படித்து வருகின்றனர். பாலின சமத்துவத்தின் அடையாளமாக சென்னைப் பல்கலைக்கழகம் திகழ்கிறது. சென்னைப் பல்கலைக்கழகம் கல்வியை மேம்படுத்துவதில், இந்தியாவுக்கு பெருமை சேர்த்து வருகிறது.

1867 ல் தொடங்கப்பட்ட பல்கலைக்கழகம், இந்தியாவில் முதன் முதலில் தொடங்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் ஒன்றாக திகழ்ந்து வருகிறது. முன்னாள் இந்திய குடியரசுத் தலைவர்கள் 6 பேர் இந்த பாரம்பரியம் மிக்க பல்கலைக்கழகத்தில் படித்தவர்கள். இன்று நீங்கள் நடந்து செல்லும் அதே பாதையில் அவர்களும் சென்றுள்ளனர் என்பது உண்மையிலேயே பெருமைக்குரிய விஷயம்.

கே.எஸ். ராதாகிருஷ்ணன், வி.வி. கிரி, நீலம் சஞ்சீவ ரெட்டி, கே.ஆர்.நாராயணன், ஆர். வெங்கட்ராமன் மற்றும் ஏபிஜே அப்துல்கலாம் ஆகியோர் இங்கிருந்து படித்து வந்தவர்கள்தான். இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்த ராஜாஜியும் இந்த பல்கலைக்கழகத்தில் படித்தவர்தான். இத்தகைய தலைவர்களை எல்லாம் உருவாக்கிய இந்த பல்கலைக்கழகத்தில் படித்து பட்டம் பெற்றுள்ள நீங்கள் அதற்காக பெருமிதம் கொள்ள வேண்டும்" என்று அவர் பேசினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கௌரவ விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

## அறந்தாங்கி அருகே புதிய ஊராட்சி மன்ற அலுவலகம் மற்றும் அங்கன்வாடி மைய புதிய கட்டிட திறப்பு விழா

### அமைச்சர் மெய்யாதனுக்கு உற்சாக வரவேற்பு



அறந்தாங்கி, ஆக.7–

அறந்தாங்கி அருகே புதிய ஊராட்சி மன்ற அலுவலகம் மற்றும் அங்கன்வாடி மைய புதிய கட்டிட திறப்பு விழாவிற்கு வருகை தந்த சுற்றுச்சூழல் துறை அமைச்சர் மெய்யாதனுக்கு கிராம மக்கள் மலர் தூவி உற்சாக வரவேற்பு அளித்தனர்.

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே நெய்வத்தளி ஊராட்சியில் இருநூறுக்கு மேற்பட்ட பெண்கள் தமிழக சுற்றுச்சூழல் துறை அமைச்சர் மெய்யநாதனை மலர் தூவி உற்சாகமாக வரவேற்றனர்.

அறந்தாங்கி ஒன்றியத்துக்கு உட்பட்ட நெய்வத்தளி ஊராட்சியில் ரூ 17 லட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி மன்ற அலுவலகம் மற்றும் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வந்த அங்கன்வாடி மையம் சுமார் 10 லட்சம் மதிப்பீட்டில் குழந்தைகள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார் அப்போது கையில் ரோஜா பூக்களுடன் குழந்தைகள் அமைச்சரை வரவேற்றனர். ஊராட்சி மன்ற அலுவலகம் மற்றும் அங்கன்வாடி திறப்பு விழாவிற்கு வருகை தந்த அமைச்சருக்கு பகுதி கிராம மக்கள் சுமார் 200க்கும் மேற்பட்டோர் ஒரு கிலோமீட்டர் தூரம் வரிசையில் நின்று உற்சாகமாக மலர் தூவி வரவேற்றனர்.

கட்டிடங்களை திறந்து வைத்த பின்னர் நிகழ்ச்சியில் அமைச்சர் பேசியபோது தான் லேட்டா வந்தாலும் நீங்கள் லேட்டஸ்டாக என்னை வரவேற்றது மிகவும் மகிழ்ச்சியாக இருப்பதாகவும் ஏற்பாடு செய்த அனைவருக்கும் அமைச்சர் நன்றி கூறியது கிராம மக்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியது, நிகழ்ச்சியில் ஊராட்சி ஒன்றியத் தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன் கட்சி நிர்வாகிகள் மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## காவிரி பிரச்சினையின் வரலாறு தெரியாமல் மத்திய அமைச்சர் கருத்து

### அமைச்சர் துரைமுருகன் சாடல்



சென்னை, ஆக.7–

"காவிரி நீர் பங்கீட்டு பிரச்சினையில் இனி பேச்சுவார்த்தைக்கு இடமில்லை என்ற நிலையில்தான் நடுவர் மன்றத்தில், தீர்ப்பு பெற்றிருக்கிறோம். இந்த தீர்ப்பில் ஏதாவது பிரச்சினை என்றால் உச்ச நீதிமன்றத்தைத் தான் நாடே வேண்டுமே தவிர, மீண்டும் கர்நாடக மாநிலத்தோடு பேச்சு வார்த்தை நடத்தலாம் என்று கூறுவது காவிரி பிரச்சினையின் அடிப்படை வரலாறே தெரியாமல் பேசுவது" என்று மத்திய இணை அமைச்சர் ராஜீவ் சந்திரசேகருக்கு, அமைச்சர் துரைமுருகன் பதில் அளித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: "கடந்த இரண்டு மாத காலமாக கர்நாடகம் தமிழகத்துக்கு உச்சநீதிமன்றம் அறிவித்த அளவுப்படி தண்ணீரை வழங்கவில்லை. இது குறித்து தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பிரதமர் மோடிக்கும், ஒன்றிய நீர்வளத் துறை அமைச்சருக்கும் கடிதம் எழுதி இருக்கிறார். ஒன்றிய நீர்வளத் துறை அமைச்சரை நான் இரண்டு முறை நேரில் சந்தித்து நிலைமைகளை விளக்கி இருக்கிறேன்.

காவிரியிலிருந்து தண்ணீரை திறந்துவிடு என்று கூறுகிற அதிகாரம் காவிரி மேலாண்மை வாரியத்துக்குத்தான் உண்டு. அந்த வாரியம் கூட்டிய கூட்டங்களில் தமிழக நீர்வளத்துறை செயலாளர் சந்தீப் சக்சேனா, கலந்து கொண்டு தமிழகத்துக்கு தண்ணீர் திறந்துவிட கர்நாடகத்தை அறிவுறுத்த வேண்டும் என்று பலமுறை கோரிக்கை வைத்துள்ளார். ஆனாலும், இதுவரையில் காவிரி மேலாண்மை வாரியம் முழுமையாக செயல்படவில்லை. நீர் சராசரியாக கிடைக்கும் வருடங்களில் கர்நாடகம் எந்தெந்த மாதங்களில் எவ்வளவு திறந்துவிட வேண்டும் என்று உச்சநீதிமன்றம் தெரிவித்திருக்கிறது. ஆனால், நீர் பற்றாக்குறை ஏற்படும் காலங்களில் நீரை பகிர்ந்து கொள்வதை Pro Rata Basis என்று குறிப்பிடுவார்கள். அந்த பங்கீட்டை காவிரி மேலாண்மை வாரியம் இதுவரை செய்யவில்லை.

இந்த வாரியம் மத்திய அரசின் கீழ் இயங்குகிறது. எனவே தான் தமிழகத்துக்கு தண்ணீரை திறந்து விட கர்நாடகத்தை அறிவுறுத்துமாறு வாரியத்திடம் கேட்டுக் கொண்டிருக்கின்றோம். அந்த பணியை வாரியம் செய்ய வேண்டும் என்றுதான் தமிழக முதல்வரும் பிரதமருக்கு கடிதம் எழுதி இருக்கிறார். அந்த கடிதத்துக்கு பிரதமர் அலுவலகமோ அல்லது ஒன்றிய நீர்வளத்துறை அமைச்சரோ பதில் அளிக்காத நிலையில், ஒன்றிய இணை அமைச்சர் ராஜீவ் சந்திரசேகர், "கர்நாடகத்தில் காங்கிரஸ் ஆட்சி, தமிழகத்தில் திமுக ஆட்சி, இரண்டும் ஓர் அணியில் இருக்கிறார்கள் ஏன் பிரச்சினையை நேரில் பேசித் தீர்த்துக் கொள்ளக்கூடாது" என்று தெரிவித்திருக்கிறார்.

ஒன்றிய இணை அமைச்சர் ராஜீவ் சந்திரசேகருக்கு காவிரி பிரச்சினையின் முழு விவரம் தெரியவில்லை என்று நினைக்கிறேன். 1967 ஆம் ஆண்டிலிருந்து 1990 ஆம் ஆண்டு வரை இப்பிரச்சினை குறித்து பேசி பேசி எந்த முடிவுக்கும் வரமுடியாத நிலையில் தான் ஒன்றிய அரசு காவிரி நடுவர் மன்றத்தை அமைத்தது. காவிரி நடுவர் மன்றம் தீர்ப்பு வழங்கி, அந்த தீர்ப்பு உச்ச நீதிமன்றத்துக்கு போய், உச்ச நீதிமன்றம் சில திருத்தங்களோடு தீர்ப்பு வழங்கிவிட்ட பிறகு இரு மாநிலங்களிடையே பேச்சு வார்த்தை என்பதற்கே இடமில்லை. பேச்சு வார்த்தையின் மூலம் பிரச்சினைக்கு தீர்வு காண முடிந்திருந்தால் நடுவர் மன்றம் அமைத்திருக்க வேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்காது. இவையெல்லாம் நீண்ட காலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிற வரலாறு.

'தாயும் பிள்ளையும் என்றாலும் வாயும் வயிறும் வேறுவேறு' என்று கிராமங்களில் கூறுவது போல, தோழமையாக இருந்தாலும் தோழமையாக இல்லாவிட்டாலும் அவரவர் உரிமையை நிலைநாட்டுவதில் அவரவர்கள் உறுதியாக இருப்பார்கள். அந்த நிலைப்பாடு தான் தமிழகத்தின் நிலைப்பாடு. இந்த விவரமெல்லாம் தெரியாமல் ஒன்றிய இணை அமைச்சர் ஒருவர் முதல்வருக்கு அறிவுரை சொல்வது போல் ஓர் அறிக்கை விட்டிருப்பது வேடிக்கையாக இருக்கிறது.

இதில் இன்னொரு வேடிக்கை. வேடிக்கையானது மட்டுமல்ல வேதனையானது என்னவென்றால், தமிழகத்தின் நீர்வளத்துறை அமைச்சராகவும், முன்னால் முதல்வராகவும் இருந்தவருமான ஓ.பன்னீர்செல்வம், ஒரு அறிக்கையில், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கர்நாடக மாநில முதல்வரோடும், நீர்வளத்துறை அமைச்சரோடும் பேசி தண்ணீரை பெற வேண்டும் என்று தெரிவித்திருப்பதுதான். இனி பேச்சுவார்த்தைக்கு இடமில்லை என்ற நிலையில்தான் நடுவர் மன்றம் போனோம், தீர்ப்பு பெற்றிருக்கிறோம்.

இந்த தீர்ப்பில் ஏதாவது பிரச்சினை என்றால் உச்ச நீதிமன்றத்தைத் தான் நாடே வேண்டுமே தவிர, மீண்டும் கர்நாடக மாநிலத்தோடு பேச்சு வார்த்தை நடத்தலாம் என்று கூறுவது காவிரி பிரச்சினையின் அடிப்படை வரலாறே தெரியாததனம் தான். பாவம், அரசியல் பிரச்சினையில் ஓ.பன்னீர்செல்வம் மிகவும் குழம்பிப் போய் இருக்கிறார் என்பதைத் தான் அவர் அறிக்கை காட்டுகிறது, என்று அவர் கூறியுள்ளார்.

## ராகுல் காந்தி இன்று நாடாளுமன்றம் திரும்புவாரா? சபாநாயகரின் முடிவுக்காக காத்திருக்கும் காங்கிரஸ்



புதுடெல்லி , ஆக.7–

ராகுல் காந்திக்கு விதிக்கப்பட்ட 2 ஆண்டு சிறைத் தண்டனையை உச்சநீதிமன்றம் நிறுத்திவைத்ததை அடுத்து, அவரை மீண்டும் எம்பி–யாக அங்கீகரிக்கும் விஷயத்தில் சபாநாயகர் ஓம் பிர்லா இன்று தனது முடிவை அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

கர்நாடகாவின் கோலார் மாவட்டத்தில் கடந்த 2019 மக்களவை தேர்தல் பிரச்சாரத்தின்போது, “எல்லா திருடர்களுக்கும் மோடி என பெயர் வந்தது எப்படி” என்று காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி பேசியது சர்ச்சையை ஏற்படுத்தியது. இதன்மூலம் மோடி சமூகத்தினரை ராகுல் அவமதித்து விட்டதாக, குஜராத் பாஜக எம்எல்ஏ பர்னேஷ் மோடி, சூரத் நீதிமன்றத்தில் அவதூறு வழக்கு தொடர்ந்தார்.

இதில் ராகுலுக்கு 2 ஆண்டுசிறைதண்டனை விதிக்கப்பட்டது. இதனால், கேரள மாநிலம் வயநாடு தொகுதி எம்.பி. பதவியில் இருந்து ராகுல் தகுதி இழப்பு செய்யப்பட்டார். இதை எதிர்த்து செஷன்ஸ் நீதிமன்றம், குஜராத் உயர் நீதிமன்றத்தில் ராகுல் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. இதையடுத்து, உச்ச நீதிமன்றத்தில் ராகுல் சார்பில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் பி.ஆர்.கவாய், பி.எஸ். நரசிம்மா, சஞ்சய் குமார் அமர்வு, "இந்த வழக்கில் விசாரணை நீதிமன்ற நீதிபதி அதிகபட்சமாக 2 ஆண்டு சிறைதண்டனை விதித்துவிட்டார். ஒரு நாள் குறைவாக விதித்திருந்தாலும், எம்.பி. பதவியில் இருந்து தகுதி இழப்பு ஆகியிருக்க முடியாது. இந்த தகுதி இழப்பால் ஏற்பட்ட விளைவுகள் தனிநபர் உரிமையை மட்டுமின்றி, அவரது தொகுதி மக்களையும் பாதித்துள்ளது. எனவே, 2 ஆண்டு சிறை தண்டனைக்கு தடை விதிக்கப்படுகிறது. அதேநேரம், பிரச்சார கூட்டத்தில் மனுதாரர் பேசியது சரியானது அல்ல. பொதுவாழ்வில் இருப்பவர் இதுபோல பேசக் கூடாது. மனுதாரர் பேசும்போது மிகவும் கவனமாக இருக்க வேண்டும்" என அறிவித்தனர்.

ராகுல் காந்தியின் 2 ஆண்டு சிறைத்தண்டனைக்கு உச்சநீதிமன்றம் தடை விதித்ததை அடுத்து, அவரை மீண்டும் எம்பி–யாக அங்கீகரிக்க வேண்டும் என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ஆதிர் ரஞ்சன் சவுத்ரி, சபாநாயகர் ஓம் பிர்லாவுக்கு காங்கிரஸ் கட்சி சார்பில் கோரிக்கை விடுத்தார். இது விஷயத்தில், சபாநாயகர் இன்னும் தனது முடிவை அறிவிக்கவில்லை. இன்று நாடாளுமன்றம் கூட உள்ள நிலையில், சபாநாயகரின் முடிவு மீது காங்கிரஸ் கட்சியின் கவனம் குவிந்துள்ளது. இந்நிலையில், சபாநாயகர் தனது முடிவை இன்று அறிவிப்பார் என தகவல் வெளியாகி உள்ளது. ஒருவேளை அவர் தனது முடிவை இன்று அறிவிக்காவிட்டால், காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் பிரச்சினையை எழுப்ப திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்

நம்மை நாம்
கேள்வி கேட்காதவரை..
நம் தவறுகளை
நாம் உணரபோவதில்லை...




### ரத்தத்தில் நச்சுகள் கலந்ததால்

## கை அகற்றப்பட்ட குழந்தை உயிரிழப்பு அரசு மருத்துவமனை விளக்கம்





சென்னை , ஆக. 7–

பாக்டீரியா தொற்றால் ரத்தத்தில் நச்சுகள் கலந்ததால் ஏற்பட்ட பாதிப்பால், கை அகற்றப்பட்ட நிலையில் எழும்பூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த ஒன்றரை வயது ஆண் குழந்தை உயிரிழந்ததாக எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை விளக்கம் அளித்துள்ளது.

இதுதொடர்பாக எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை வெளியிட்டுள்ள அறிக்கையில், "ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஒன்றரை வயது குழந்தை முகமது மகிர், குறை பிரசவத்தில் 1.5 கிலோ எடையுடன் 32 வாரத்தில் பிறந்துள்ளது. அந்த குழந்தைக்கு தீவிர Hydrocephalus என்ற மூளையில் நீர்கசிவு கோளாறு இருந்தது.

இந்த நீர் கசிவை உறிஞ்சி எடுப்பதற்காக, 5 மாத காலமாக VP Shunt என்ற சிகிச்சை வழங்கப்பட்டது. மேலும், விட்டமின் டி குறைபாடு, ஹைப்போதைராய்டிசம் உள்ளிட்ட குறைபாடுகளும் காணப்பட்டன. தீவிர ஊட்டச்சத்து குறைபாடு, வளர்திறன் குறைபாடு கொண்ட அந்த குழந்தைக்கு, நீர் கசிவை உறிஞ்சுவதற்காக பொருத்தப்பட்டிருந்த VP Shunt ஆசனவாய் வழியாக வெளியேறிய காரணத்தால், குழந்தையின் உடல்நிலை தொடர்ந்து பாதிக்கப்பட்டு வந்தது. இதனால் ஏற்பட்ட பாக்டீரியா தொற்றினால், குழந்தையின் ரத்தத்தில் நச்சுக்கள் கலந்ததால் பல்வேறு பாதிப்புகள் ஏற்பட்டது. இந்த நிலையில் மருத்துவர்கள் வழங்கிய சிகிச்சை பலனின்றி அந்த குழந்தை உயிரிழந்துள்ளது" என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, ராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்தவர் தஸ்தகீர். இவரது ஒன்றரை வயது மகன் முகமது மகிருக்கு, தலையில் நீர் வழிந்ததால் சிகிச்சைக்காக, சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். சிகிச்சையில் இருந்த குழந்தையின் வலது கை அழுகியதால், அந்த கை அகற்றப்பட்டது. தவறான சிகிச்சையால்தான் குழந்தையின் கை பாதிக்கப்பட்டதாக பெற்றோர் குற்றம் சாட்டினர். இது தொடர்பாக விசாரணை நடத்த 3 மருத்துவர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டது.

இந்நிலையில், எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த குழந்தை உயிரிழந்தது. குழந்தையின் உயிரிழப்புக்கு மருத்துவமனை நிர்வாகத்தின் அலட்சியம் தான் காரணம் என பெற்றோர் குற்றம் சாட்டியுள்ளனர்.

## பழங்குடியின மக்களுக்கு எய்டு இந்தியா யுரேகா வீடுகள் பூமி பூஜை நிகழ்வு



புதுக்கோட்டை ஆக 7

புதுக்கோட்டை மாவட்டம் அன்னவாசல் ஒன்றியம் சிப்காட் பகுதியில் காமராஜர் நகரில் பழங்குடியின மக்கள் 60 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். அவர்கள் கல்வியிலும் பொருளாதாரத்திலும் மிகவும்பின் தங்கியுள்ளனர் குறிப்பாக கல்லூரி படிப்பு ஒரே ஒரு மாணவன் மட்டுமே படித்துக் கொண்டிருக்கிறார் அவருக்கும் சாதி சான்று இல்லாததால்மேற்படிப்பை தொடர இயலவில்லை என வருந்துகிறார்.

அப்படிப்பட்ட மக்களின் அடிப்படை தேவையான கல்வி மற்றும் பொருளாதார மற்றும் வளர்ச்சிக்காக அந்த மக்களுக்கு எய்டு இந்தியா வீடுகள் காட்டிக்கொடுக்க தீர்மானித்து ஒரு வீட்டின் மதிப்பு 2 லட்சத்து 30 ஆயிரம் மதிப்பீட்டில் பத்து பயனாளிகளுக்கு வீடுகள் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நடைபெற்றது. மொத்தம் 23 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட இருக்கிறது. இந்நிகழ்விற்கு கந்தர்வகோட்டை சட்டமன்ற உறுப்பினர் சின்னத்துரை கலந்து கொண்டு அடிக்கல் நாட்டினார். மேலும் இந்திய வளர்ச்சி இயக்கத்தின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்ராஜா, ஓய்வு பெற்ற முதன்மை கல்வி அலுவலர் சாமி சத்தியமூர்த்தி, குளத்தூர் வட்டாட்சியர் சக்திவேல், வருவாய் ஆய்வாளர் அருண், வானவில் மன்ற கருத்தாளர்கள் பிச்சையம்மாள், ராதா , மல்லிகா , விஜயசாந்தி, சமூக ஆர்வலர்கள் சலோமி, சண்முகம் , ஜோஷி, ரகுபதி, மற்றும் தேவராஜன் ஆகியோர் கலந்துகொண்டனர் கடந்த ஆண்டு 5 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.




## சீர்காழி அருகே வெள்ளபள்ளம் கிராமத்தில் மாவட்ட ஆட்சியர் மகாபாரதி நேரில் ஆய்வு



சீர்காழி,ஆக,7

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அடுத்த புதுத்துறை ஊராட்சிக்கு உட்பட்ட வெள்ளப்பள்ளம் கிராமம் அமைந்துள்ளது.

இந்த கிராமத்தில் 200 குடும்பங்களை சேர்ந்த சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வசித்து வருகின்றனர்.

இவர்களுக்கு புதுத்துறை ஊராட்சி கிராமத்திற்கு சென்றுவர புதிய பாலம் அமைத்து தர கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்நிலையில் புதிய பாலம் அமைய உள்ள இடத்தை மாவட்ட ஆட்சியர் மகாபாரதி நேரில் ஆய்வு செய்தார்.

மேலும் வெள்ளை பள்ளம் கிராமத்தில் இருந்து புதுத்துறைக்கு செல்ல புதிதாக பாலம் கட்டுவதற்கு 6.83 கோடி மதிப்பீட்டில் பாலம் அமைய உள்ளதாகவும், விரைவாக கட்டி முடிக்க உள்ளதாகவும் தெரிவித்தார். மேலும் தற்காலிக பாலத்தை சீரமைக்க ரூ 2 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் பணிகள் நடைபெற்றுவருவதாகவும் தெரிவித்தார்.

வெள்ளை பள்ளம் கிராம மக்களை சந்தித்த மாவட்ட ஆட்சியர் குடிநீர் தட்டுப்பாடு குறித்து கேட்டு அறிந்து அதிகாரிகளிடம் உடனடி தீர்வு காண ஆணையிட்டார் வெள்ளப்பள்ளம் கிராம மக்களுக்கு அடிப்படை தேவைகளான குடிநீர், சாலை, தெரு விளக்கு, உள்ளிட்ட அடிப்படை வசதிகளை செய்து தருவதாக உறுதியளித்தார்.

இந்த ஆய்வின்போது சீர்காழி கோட்டாட்சியர் அர்ச்சனா, சீர்காழி வட்டாட்சியர் செந்தில்குமார் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் உடன் இருந்தனர்.

## உலக மாற்றுத் திறனாளிகள் போட்டியில் தமிழக வீரர்கள் சாதனை



மதுரை , ஆக. 7–

ஜெர்மனி நாட்டில், உலக அளவில் உயரம் குறைந்த மாற்றுத் திறனாளிகளுக்கான தடகளப் போட்டியில், தென்மாவட்ட வீரர்கள் தங்கம், வெண்கலப் பதக்கங்களை வென்று சாதித்துள்ளனர்.

ஜெர்மனியில் நடைபெற்ற தடகளப் போட்டியில், 26 நாடுகளைச்சேர்ந்த உயரம் குறைந்த 700 மாற்றுத்திறன் வீரர்கள், வீராங்கனைகள் பங்கேற்றனர். இதில், தமிழகத்திலிருந்து 7 பேர் உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து 29 பேர் பங்கேற்றனர்.

இவர்களுக்கு விமானக் கட்டணம், நுழைவுக் கட்டணம், உணவு, தங்கும் வசதி உள்ளிட்ட செலவுகளுக்காக ஒருவருக்கு தலா ரூ.2 லட்சத்து 49 ஆயிரம் வீதம் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி காசோலை வழங்கி அனுப்பி வைத்தார்.

இந்நிலையில், மதுரை மாவட்டம் உசிலம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த கணேசன் குண்டு, வட்டு, ஈட்டி எறிதலில் மூன்று தங்கப் பதக்கமும், மதுரை அச்சம்பத்தைச் சேர்ந்த மனோஜ் குண்டு எறிதலில் தங்கம், வட்டு எறிதலில் வெண்கலம், புதுக்கோட்டை மாவட்டம், கோணாம்பட்டு செல்வராஜ் ஈட்டி எறிதலில் தங்கம்,

இதே மாவட்டம் ஒடுகாம்பட்டியைச்சேர்ந்த பாலசுப்பிரமணியன் பாட்மின்டனில் தங்கம், சேலம் வெண்ணிலா 60 மீட்டர், 100 மீட்டர் வட்டு எறிதலில் 3 வெள்ளி, இன்பத்தமிழ் 60 மீட்டர், 100 மீட்டரில் 2 வெண்கலம், வத்தல குண்டுவைச்சேர்ந்தநளினி குண்டு, வட்டு எறிதலில் வெண்கலப் பதக்கமும் மற்றும் இரட்டையர் பாட்மின்டன் பிரிவில் வெண்கலம் பெற்று பெருமைசேர்த்துள்ளனர்.

## நாடு முழுவதும் 508 ரெயில் நிலையங்கள் மறுசீரமைப்பு– அடிக்கல் நாட்டினார் பிரதமர்



டெல்லி , ஆக. 7–

நாடு முழுவதும் 508 ரெயில் நிலையங்களின் சீரமைப்புப் பணிகளுக்கு பிரதமர் நரேந்திர மோடி நேற்று காணொலி வாயிலாக அடிக்கல் நாட்டினார். அம்ரித்பாரத் ரெயில்நிலையதிட்டத்தின் கீழ் 24 ஆயிரத்து 470 கோடி செலவில் இந்த ரெயில் நிலையங்கள் மறுசீரமைக்கப்பட உள்ளன.

இந்த 508 ரெயில் நிலையங்களில் உத்தரபிரதேசம் மற்றும் ராஜஸ்தானில் தலா 55 ரெயில் நிலையங்கள் இடம்பெற்றுள்ளன. பீகாரில் 49, மகாராஷ்டிராவில் 44, மேற்கு வங்காளத்தில் 37, மத்தியப் பிரதேசத்தில் 34, அசாமில் 32, ஒடிசாவில் 25, பஞ்சாபில் 22, குஜராத் மற்றும் தெலுங்கானாவில் தலா 21, ஜார்க்கண்டில் 20, ஆந்திரா மற்றும் தமிழ்நாட்டில் தலா 18, அரியானாவில் 15, கர்நாடகாவில் 13 என 27 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள ரெயில் நிலையங்களில் மறுசீரமைப்பு பணிகள் நடைபெற உள்ளதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்த மறுசீரமைப்பு பணியானது, நன்கு வடிவமைக்கப்பட்ட போக்குவரத்துசுழற்சியுடன் பயணிகளுக்கு நவீன வசதிகளை வழங்குகிறது. ரெயில் நிலைய கட்டிடங்கள் உள்ளூர் கலாச்சாரம், பாரம்பரியம் மற்றும் கட்டிடக்கலையை பிரதிபலிக்கும் வகையில் இருக்கும்.

## காரைக்காலில் சமுதாய நலப்பணி திட்ட மாணவர்களின் ஆரோக்கிய உணவுத் திருவிழா



காரைக்கால், ஆக. 7–

காரைக்கால் கோட்டுச்சேரி அன்னை அபிராமி தேசிய மேல்நிலைப் பள்ளியில் சமுதாய நலப்பணித் திட்டத்தின் கீழ் மாணவர்கள் துரித உணவு மற்றும் பாக்கெட்டுகளில் அடைத்து விற்கப்படும் உணவுப் பொருட்களை சாப்பிடக் கூடாது என்பதற்காக பாரம்பரிய மற்றும் சத்தான உணவு பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பள்ளி மாணவர்களுக்கு ஆரோக்கிய உணவு திருவிழா மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது.

மேலும் உணவு திருவிழாவில் மாணவர்களால் பல்வேறு வகையான சிறு தானியங்கள் கீரை வகைகள் பழங்கள் காய்கறிகள் கொண்டு வண்ணமயமான உணவுகள் தயாரிக்கப்பட்டு காட்சி படுத்தப்பட்டது விழாவிற்கு கோட்டுச்சேரி ஆரம்ப சுகாதார மையத்தின் மருத்துவ அதிகாரி டாக்டர் நிஷா மற்றும் காரைக்கால் பொது மருத்துவமனை டாக்டர் சிவசங்கரன் ஆகியோர். நடுவர்களாக கலந்து கொண்டனர் பெற்றோர்களுடன் இணைந்து தயார் செய்த ஆரோக்கியமான உணவுகளை மாணவர்களால் காட்சி படுத்தப்பட்டது பள்ளியின் தலைமையாசிரியர் எம். நித்யா நமது பாரம்பரிய உணவுகளை பற்றியும் அதன் பயன்கள் பற்றியும் எடுத்துக் கூறி வரவேற்புரையாற்றினார் இறுதியில் பள்ளியின் தாளாளர் டாக்டர் மாரியப்பன் மாணவர்கள் அனைவருக்கும் நினைவு பரிசினை வழங்கி நன்றியுரை ஆற்றினார் இவ்விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் பள்ளியின் ஆசிரியர்களும் மிக சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

## மது வருவாயை நம்பி தமிழக அரசு இயங்கிக் கொண்டிருக்கிறது அண்ணாமலை விமர்சனம்



**திருப்பரங்குன்றம் , ஆக. 7–**

மதுவினால் கிடைக்கும் வருவாயை நம்பிதமிழகஅரசுஇயங்கிக் கொண்டிருக்கிறது என்று பாஜக மாநில தலைவர் அண்ணாமலை விமர்சித்துள்ளார்.

என் மண் என் மக்கள் யாத்திரையை மேற்கொண்டு வரும் தமிழ்நாடு பாஜக மாநில தலைவர் அண்ணாமலை, மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றத்தில் நேற்று நடைபயணம் மேற்கொண்டார். திருப்பரங்குன்றம் கோவில் பகுதியில் இருந்து நடைபயணத்தைத் தொடங்கிய அவர், மக்கள் மத்தியில் பேசியதாவது: "மதுவினால் கிடைக்கும் வருமானம், தொழுநோயாளி கையில் இருக்கும்வெண்ணைக்குச் சமம் என சொன்னவர் மறைந்த முன்னாள் முதல்வர் அண்ணா. ஆனால், மதுவிலிருந்து வரும் வருமானத்தில் ஆட்சி செய்ய வேண்டிய நிலையில் தமிழ்நாடு அரசு உள்ளது.

தமிழகத்தின் முதல் குடும்ப ஊழல் குறித்து அமைச்சர் பிடிஆர் பழனிவேல் தியாகராஜன் பேசி நீண்ட நாட்கள் ஆகிவிட்டன. ஒருமுறை உண்மையை பேசியதற்கு அவருக்கு கிடைத்த பரிசு அமைச்சரவை மாற்றம். தமிழகத்தின் வளர்ச்சிக்கு மிக முக்கிய காரணம் சௌராஷ்டிரா மக்கள். நெசவுத்தொழில் செய்யும் அவர்களுக்கு விசைத்தறிக்கூடம் அமைத்துத் தருவதாக திமுக வாக்குறுதி கொடுத்தது. ஆனால், இன்னும் நிறைவேற்றவில்லை.

திருப்பரங்குன்றம் தொகுதிக்கு உட்பட்ட காங்கிரஸ் எம்பி மாணிக்கம் தாகூர், பாதி நேரம் டெல்லியில் தான் இருப்பார். மதுரை, விருதுநகர் எம்பிகளால் மக்களுக்கு எந்த பயனும் இல்லை. இத்தொகுதியிலுள்ள மீன் மார்க்கெட் பகுதிக்கு சென்றபோது அங்கு குடிதண்ணீர் வரவில்லை என பெண்கள் புகார் தெரிவித்தனர். தண்ணீரும் வருவதில்லை, எம்பி, எம்எல்ஏ போன்ற மக்கள் பிரதிநிதிகளையும் காணவில்லை என அவர்கள் கூறுகின்றனர். கர்நாடகாவில் இருந்து தமிழ்நாடுக்கு வரவேண்டிய காவிரி நீர் வராது. காரணம், தமிழகத்தில் உள்ள அரசு செயல் இழந்து நிற்கிறது.

கடந்த 2014ல் 24 கோடி பெண்கள்மட்டுமேவங்கிக் கணக்கு வைத்திருந்தனர். நரேந்திர மோடி ஆட்சிக்கு வந்தபின் 79 கோடி பெண்கள் வங்கிக் கணக்கு தொடங்கியுள்ளனர். கடந்த 2014 ல் 11 சதவீதம் பள்ளிகளில் மட்டுமே மாணவிகளுக்கான தனி கழிப்பறை வசதி இருந்தது. அது தற்போது 100 சதவீதமாக உயர்ந்துள்ளது. இந்த நடைபயணத்தின்போது சாலையில் கொடி, பிளாஸ்டிக் பாட்டில்கள் போன்றவை கீழே விழுகின்றன. அவற்றை சுத்தம் செய்யும் பணியை தூய்மைபாரதம்குழுவினர் மேற்கொள்கின்றனர். நாங்கள் சாலையை சுத்தம் செய்வது போன்று அரசியலையும் சுத்தம் செய்கிறோம்." இவ்வாறு அண்ணாமலை உரையாற்றினார்.

திருமங்கலம் பேருந்து நிலைய பகுதியில் நடைபயணம்தொடங்கிய அண்ணாமலை, சிறிது தூரம் சென்றார். பிறகு அவசர பணி நிமித்தமாக பிற்பகல் விமானம் மூலம் சென்னை புறப்பட்டுச் சென்றார். மதுரை பழங்காநத்தம் பகுதியில் நேற்று இரவு நடக்க இருந்த பொதுக் கூட்டமும் திடீரென ரத்து செய்யப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் மத்திய சுகாதார அமைச்சர் மன்சுக் மாண்டவியா பங்கேற்க இருந்த நிலையில், அவர் வராததால் கூட்டம் ரத்து செய்யப்பட்டதாக பாஜக நிர்வாகிகள் தெரிவித்தனர்.

# தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய சங்கத்தின் மாநில தலைவருக்கு பாராட்டு விழா

மயிலாடுதுறை, ஆக.7–

மயிலாடுதுறை மாவட்டம் நாஞ்சில்நாடு பகுதியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய சங்கத்தின் புதிய மாநில தலைவராக பொறுப்பேற்றுள்ள அமிர்தகுமாருக்கு பாராட்டு விழா நடைபெற்றது.



▶ திமுக மாவட்ட செயலாளர் நிவேத முருகன் வாழ்த்து தெரிவித்த போது.



▶ அதிமுக மாவட்ட செயலாளர் எஸ் பவுன்ராஜ் வாழ்த்து தெரிவித்த போது.

இந்த நிகழ்ச்சியில் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினரும், மயிலாடுதுறை மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் தலைவருமான ராஜ்குமார், மயிலாடுதுறை மாவட்ட அதிமுக செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான எஸ் பவுன்ராஜ் உள்ளிட்ட பல்வேறு முக்கிய பிரமுகர்கள் பங்கேற்று மாநில தலைவருக்கு சால்வை அணிவித்து வாழ்த்துக்களை தெரிவித்தனர். பின்னர் பேசிய மாநில தலைவர் அமிர்த குமார் கூறிய போது :-

தமிழகத்தில் பணிபுரியக்கூடிய அரசு அலுவலக ஆசிரியர்களுக்கு பங்களிப்பு ஓய்வூதியத்தை ரத்து செய்துவிட்டு பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என முதலமைச்சரிடம் கோரிக்கை வைத்திருந்தோம், தற்போது வரை அரசு செவி சாய்க்கவில்லை என்றும் பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்தாவிட்டால் சங்கத்தின் சார்பில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்.

21மாத அகவிலைப்படி அரசு உடனடியாக வழங்க வேண்டும் என்றும், காப்பீட்டு திட்டத்தின் மூலம் தனியார் கொள்ளை லாபம் பெறுவதாகவும் அதனை அரசே ஏற்று நடத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

வருகின்ற ஆண்டு நூற்றாண்டு விழா நடத்த இருப்பதாகவும் அதில் முதலமைச்சருக்கு அழைப்பு விடுக்கப்பட்டு பல்வேறு கோரிக்கைகளை முன்வைக்க இருப்பதாகவும் கூறினார்.

# அரியலூர் அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற விதை திருவிழா



அரியலூர்,ஆக.7–

அரியலூரில் விதை திருவிழா நடைபெற்றது.

தமிழ்க்காடு இயற்கை வேளாண்மை இயக்க அரியலூர் மாவட்ட அமைப்பு சார்பில், அரியலூர் அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற விதை திருவிழா துவக்க விழாவுக்கு, ரமேஷ் கருப்பையா தலைமை வகித்தார். அரியலூர் இயன் முறை மருத்துவர் சுமதி கதிரவன் வரவேற்று பேசினார். தமிழ் பண்பாட்டு பேரமைப்பு தலைவர் சீனி பாலகிருஷ்ணன், அமைப்பு செயலாளர் அ. நல்லப்பன் ஆசிரியர், ஓய்வு பெற்ற ஊரக வளர்ச்சி துறை உதவி இயக்குனர் அசன் முகமது உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் கு.சின்னப்பா, விதை திருவிழாவை தொடங்கி வைத்து, இயற்கை விவசாயி மல்லூர் சீனிவாசனிடம், வெள்ளை சம்பா நெல் விதைகளை வழங்கி பேசினார். மண் வளமே மகசூல் வளம் என பெரம்பலூர் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் கல்லூரி வேதியல் துறை தலைவர் முனைவர் நேதாஜி மாரியப்பன், பயிர்களும் பூச்சிகளும் என நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலைய இணை பேராசிரியர் ராதா கிருஷ்ணன், மரங்களும் வளர்ப்பு முறைகளும் என திருச்சி வனத்துறை தொழில்நுட்பவியலாளர் ராமசுந்தரம், நம்ம விதை நாட்டு விதை என முன்னோடி மரபு விதை சேகரிப்பாளர் முசிறி யோகநாதன் உள்ளிட்டோர் கருத்துரை பேசினர்.

பல்வேறு அமைப்புகள் சார்பில் காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டிருந்த இந்த விதை திருவிழாவில், திருவையாறு பேரூராட்சி நிர்வாக அலுவலர் ராஜா, பெரம்பலூர் சிவில் சப்ளை கார்ப்பரேஷன் துணை மேலாளர் வரதராஜன், அரியலூர் மதிமுக ஒன்றிய செயலாளர் சங்கர், பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் எஸ் எம் சந்திரசேகர், தலைமை ஆசிரியர்கள் லிங்கத்தடிமேடு சௌந்தர்ராஜன், சிறுவளூர் சின்னதுரை, சித்த மருத்துவர் வேலுச்சாமி, ஆசிரியர்கள் செல்வேள், ஆவாரை ராஜேந்திரன், மற்றும் விவசாயிகள், பொதுமக்கள் உள்பட கலர் கலந்துகொண்டனர், முடிவில் தமிழ்க்களம் இளவரசன் நன்றி கூறினா



▶ புதுக்கோட்டை ரோட்டரி சங்கம் ராணியார் மகப்பேறு மருத்துவமனை இணைந்து நடத்திய உலக தாய்ப்பால் வார விழா மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்றது தலைமை மருத்துவர்கள் ஜெயராணி, பீட்டர், உமாராணி மருத்துவமனை செவிலியர் கண்காணிப்பாளர்கள் இந்திராணி ரோட்டரி சங்க நிர்வாகிகள் ஆரோக்கியசாமி, ஜெயக்குமார் ஆகியோர் கலந்துகொண்டு 30 தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து மாவு, பேரிச்சம்பழம், பிரட் பாக்கெட், காட்டன் துண்டு உள்ளிட்டவைகளை சங்கத்தின் தலைவர் கேஎல்.கேஏ.ராஜ முகம்மது தலைமையில் வழங்கி சிறப்பித்தனர். நிகழ்வில் செயலாளர் டாக்டர் ராம்பிரகாஷ், பொருளாளர் அருண் உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### தமிழக நீதிமன்றங்களில் டாக்டர் அம்பேத்கர் படத்தை

# மீண்டும் நிறுவ வேண்டும் என்று தமிழகம் மற்றும் புதுச்சேரி பார்கவுன்சில் கோரிக்கை

சென்னை, ஆக,7



இது குறித்து பார்கவுன்சில் தலைவர் அமல்ராஜ் வெளியிடுள்ள அறிக்கையில் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள நீதிமன்ற வளாகங்களில் மகாத்மா காந்தி மற்றும் திருவள்ளுவர் படங்களைத் தவிர வேறு யார் திருவுருவ படங்களையும் வைக்க கூடாது என சென்னை உயர்நீதிமன்றபதிவுத்துறை சமீபத்தில் சுற்றறிக்கை வெளியிட்டது.

இந்த சுற்றறிக்கையை அடுத்து பல நீதிமன்ற வளாகங்களில் அம்பேத்கரின் படங்கள் அகற்றப்பட்டது இதற்கு வழக்கறிஞர்கள் சங்கங்கள் எதிர்ப்பு தெரிவித்தன இந்த பிரச்சினையில் தமிழக அரசின் தலையிட்டதாலும் வழக்கறிஞர்கள் சங்கங்கள் முறையீட்டை ஆலும் தற்போது அந்த சுற்றறிக்கை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தமிழ்நாடு மட்டும் புதுச்சேரி பார் கவுன்சில் பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது இந்த கூட்டத்தில் நீதிமன்ற வளாகங்களில் மகாத்மா காந்திமற்றும்திருவள்ளுவர் படங்களுடன் அம்பேத்கர் படத்தையும் வைப்பது குறித்து பரிசீலிக்கும்படி தலைமை நீதிபதியை கேட்டுக் கொள்வது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது இந்த தீர்மானம் குறித்து கோரிக்கை மனு சென்னை உயர் நீதிமன்ற நீதிபதியிடம் அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தலைவர் அமல்ராஜ் வெளியிடுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது

# சீர்காழியில் காலியாகும் மாற்றுக்கட்சியினர் கூடாரம் அதிமுகவில் இணைய படையெடுக்கும் கட்சியினர்

சீர்காழி, ஆக,7

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி மாரியம்மன் கோவில் தெரு ஏழாவது வார்டை சேர்ந்த 300-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் ஏழாவது வார்டு அதிமுக நகர்மன்ற உறுப்பினர் நித்யா தேவி பாலமுருகன் ஏற்பாட்டில் மயிலாடுதுறை மாவட்ட செயலாளர் எஸ்.பவுன்ராஜ் தலைமையில் தங்களை அதிமுகவில் இணைத்து கொண்டனர்.

கட்சியில் இணைந்த அனைவருக்கும் மாவட்ட செயலாளர் பவுன்ராஜ் சால்வை அணிவித்து இன்முகத்தோடு வரவேற்றார்.



நிகழ்ச்சியில், சீர்காழி நகர செயலாளர் எல். வி.ஆர் வினோத், ஒன்றிய செயலாளர்கள் நற்குணன், ஏ.கே சந்திரசேகரன், ஆதமங்கலம் ரவிச்சந்திரன் , சிவகுமார் மற்றும் அதிமுக நகர்மன்ற உறுப்பினர்கள் ராஜேஷ் வைத்தீஸ்வரன் கோவில் பேரூராட்சி செயலாளர் போகர் ரவி, மற்றும் அதிமுக நிர்வாகிகள் மதிவாணன், திருமாறன், மார்கோனி, கோகுல்குமார், ஆனந்தன், தகவல் தொழில்நுட்ப பிரிவு நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# பாகிஸ்தானில் ரயில் தடம்புரண்டு விபத்து 22 பேர் உயிரிழப்பு 80 பேர் படுகாயம்



கராச்சி , ஆக. 7–

பாகிஸ்தானின் ஷஹீத் பெனாசிர்பாத் மாவட்டத்தில் ரயில் ஒன்று தடம்புரண்டத்தில் 22பேர் உயிரிழந்துள்ளனர்.

பாகிஸ்தானின் கராச்சியில் இருந்து அபோதாபாத் வரை ஹஸாராஎக்ஸ்பிரஸ்ரயில், ஷஹீத் பெனாசிர்பாத் மாவட்டத்தில் உள்ள நவாப்ஷா பகுதியில் சென்று கொண்டிருந்த போது எதிர்பாராத விதமாகதண்டவாளத்தில் இருந்து தடம் புரண்டது. நவாப்ஷாவுக்கும் ஷாஹ்தாபூருக்கும் இடையே சஹாரா ரயில் நிலையத்திலிருந்து புறப்புட்டுச் சென்றபிறகு இந்த விபத்து நிகழ்ந்ததாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த விபத்தில் 22பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் 80 பேர் படுகாயமடைந்துள்ளனர். தடம்புரண்ட பத்து பெட்டிகளில் சிக்கியுள்ள மக்களை மீட்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. மேலும் விபத்துக்கான காரணம் குறித்து விரிவான விசாரணை நடத்தப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதே போல கடந்த 2021ஆம் ஆண்டு இதே சிந்து மாகாணத்தில் ரயில் பெட்டிகள் தடம்புரண்டதில் 50க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். 100க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். பல ஆண்டுகளாக பாகிஸ்தானின் ரயில்வே துறையை மேம்படுத்த அரசாங்கங்கள் முயன்று வரும் நிலையில், நிதிப் பற்றாக்குறை காரணமாக அது நிறைவேறாமல் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

# காஞ்சிபுரத்தில் தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் சார்பில் 77வது சுதந்திர தினத்தை முன்னிட்டு இரத்த தான முகாம்

காஞ்சிபுரம்,ஆக,7



காஞ்சிபுரம் பகுதியில் உள்ள ஒளிமுகமது பேட்டையில் ஹாஜி நகரில் உள்ள TNTJ மார்க்ஸ் பகுதியில் இந்திய நாட்டின் 77 ஆவது சுதந்திர தினத்தை போற்றும் வகையில் தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத் கிளை சார்பில் காஞ்சிபுரம் அரசு தலைமை மருத்துவமனை இணைந்து நடத்தும் 34 வது மாபெரும் ரத்ததான முகாம் இன்று நடைபெற்றது.

இதில் தமிழ்நாடு ஜாபித் ஜமாத் கட்சியினர் ஆண், பெண் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் இதில் கலந்துகொண்டு இன்று ரத்ததானம் வழங்கினர். இன்று ஒரே நாளில் 100க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு அனைத்து வகை ரத்தங்களும் தானமாக செலுத்தி இந்திய சுதந்திர தினத்தை போற்று வருகின்றனர்.இரத்ததானம் முகாம் பங்கேற்று இரத்த செய்த பொதுமக்களும் சான்றிதழ் வழங்கி பாராட்டு தெரிவித்தனர்.

இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத் தின் மாவட்ட மருத்துவ அணி செயலாளர் சர்புதீன், கிளை செயலாளர் முபுஜூர் ரஹ்மான் ஆகியோர் கலந்து கொண்டனர் .

# புதுக்கோட்டை அருகே நடைபெற்ற வெடி விபத்தில் பலியானவர் எண்ணிக்கை மூன்றாக உயர்வு நிவாரணம் அறிவித்தார் முதல்வர்

சென்னை, ஆக. 7–

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஜூலை30ம் தேதி வெடிமருந்து தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்தில் காயமடைந்து சிகிச்சை பலனின்றி மருத்துவமனையில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்து நிதியுதவியை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இது குறித்து தமிழக முதல்வர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

புதுக்கோட்டை மாவட்டம், வெள்ளனூர் வட்டம், பூங்குடி கிராமத்தில் இயங்கி வந்த தனியாருக்குச் சொந்தமான வெடிமருந்து தொழிற்சாலையில் கடந்த (30-7-2023) அன்று ஏற்பட்ட வெடிவிபத்தில் காயமடைந்து புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த ஐந்து நபர்களில் கோவில்பட்டியைச் சேர்ந்த வீரமுத்து, த/பெ.கருப்பையா (வயது 31) என்பவர் 3-8-2023 அன்றும், திருமலை, த/பெ. ஆறுமுகம் (வயது 30) என்பவர் 4-8-2023 அன்றும், வெள்ளனூரைச் சேர்ந்த சுரேஷ், த/பெ.பழனி (வயது 35) என்பவர் நேற்றும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

மேலும் இவ்விபத்தில் படுகாயமடைந்து புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் வைரமணி, மற்றும் குமார் ஆகிய இருவருக்கும் சிறப்பு சிகிச்சை அளிக்கவும் அறிவுறுத்தியுள்ளேன். உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு அவர்களது குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் இருவருக்கும் தலா ஒரு இலட்சம் ரூபாயும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

### கும்மிடிப்பூண்டி சவுண்டுமண் குவாரியில்

# சாப்பிட்டுக் கொண்டிருந்த டிரைவர் மீது லாரி மோதியதில் சம்பவ இடத்திலேயே பலியானார்

ஊத்துக்கோட்டை, ஆக. 7–



திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டியில் பொதுப்பணி துறைக்கு சொந்தமான ஏரியில் மாவட்ட கனிமவளத்துறை அதிகாரிகளின் அனுமதியுடன் குவாரி ஒன்று இயங்கி வருகிறது.

இந்நிலையில்,இந்த குவாரியில் நேற்று மாலை சவுடு மண் ஏற்றிச் செல்ல ராக்கம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த டிரைவர் மதன்குமார் (வயது31) என்பவர் லாரியுடன் வந்திருந்தார். சவுண்டு மண் ஏற்ற காலதாமதம் ஏற்பட்டதால் அங்குள்ள மைதானத்தில் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அப்பொழுது இந்த ஏரியில் சவுடு மண் ஏற்றிச் செல்ல வந்த லாரி ஒன்று மின்னல் வேகத்தில் வந்தது.

கண் இமைக்கும் நேரத்தில் சாப்பிட்டுக் கொண்டிருந்த மதன்குமார் மீது பயங்கரமாக மோதியது. இந்த விபத்தில் சம்பவ இடத்திலேயே மதன்குமார் துடி துடித்து பலியானார். இந்த சம்பவத்தை பார்த்து அதிர்ச்சி அடைந்த சக டிரைவர்கள் மதன்குமாரின் உடலை பார்த்து கதறி அழுதனர்.

இச்சம்பவம் காட்டுத் தீயாகப் பரவியது. மதன்குமாரின் உறவினர்கள் குவாரியை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். குற்றவாளியை உடனடியாக கைது செய்ய வேண்டும் என கோரிக்கை வைத்தனர். தகவல் அறிந்த சிப்காட் காவல் நிலைய போலீசார் இன்ஸ்பெக்டர் வடிவேல் முருகன் தலைமையில் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் குற்றவாளிகளை விரைவில் பிடிப்பதாக உறுதி கூறினர்.

இதனை ஏற்று அனைவரும் அமைதியாக கலைந்து சென்றனர். இதன் பின்னர்,போலீசார் மதன்குமார் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்கு பொன்னேரி அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். இந்த சம்பவத்தால் அப்பகுதியில் சுமார் இரண்டு மணி நேரம் பதட்டமும், பரபரப்பும் நிலவியது.

# மதுரையில் மக்கள் நீதி மையம் சார்பாக மணிப்பூர் கலவரத்தை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

மதுரை,ஆக.7–

மதுரை பெத்தானியாபுரம் பகுதியில் மக்கள் நீதி மையம் சார்பாக மணிப்பூர் கலவரத்தை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது, இந்த ஆர்ப்பாட்டத்தில் இது என்ன இந்தியாவா அல்லது இன்னொரு இலங்கையா இப்படியே விட்டு விட்டால் இன்று அவர்களுக்கு நாளை நமக்கு என்பன உள்ளிட்ட பல்வேறு கோஷங்கள் எழுப்பப்பட்டன இந்த ஆர்ப்பாட்டத்தில் மண்டல செயலாளர் அழகர் தலைமை தாங்கினார்,

மேற்கு தொகுதி மாவட்டச் செயலாளர் முத்துக்கிருஷ்ணன் முன்னிலை வகித்தார், ஆர்ப்பாட்டத்தில்



கட்சியின் மாநில இளைஞரணி செயலாளர் கவிஞர் சினேகன் கண்டன உரையாற்றி கோஷமிட்டு ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றார், அவரைத் தொடர்ந்து மேலும் இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்டச் செயலாளர் மணி, அயூப் கான்,கதிரேசன்,சிவராஜன் கணேஷ்குமார், ராஜா ,சீனிவாச பாபு மண்டல அமைப்பாளர்கள். ராஜா, நாகநாதன் ,கிருஷ்ணகுமார் ,பரணி ராஜன் ,பத்மாவதி ,சிவ பாலகுரு ஜாபர் மக்கள் நீதி மைய நிர்வாகிகள் ஏராளமானோர் பங்கேற்றனர்.

# ஆத்மா யோகா மையம் நடத்திய மாநில யோகாசன வாகையர் போட்டியில் கொங்கு மாவட்டங்கள் வாகையர் பட்டம் வென்றது



புதுக்கோட்டை, ஆக.07-

புதுக்கோட்டையில் ஆத்மா யோகா மையம் நடத்திய 22-வது மாநில யோகாசன வாகையர் போட்டியில் கரூர், திருப்பூர் மாவட்டங்கள் வாகையர் பட்டத்தை வென்றனர்.

புதுக்கோட்டை ஆத்மா யோகா மையம் சார்பாக 22 -வது தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி அளவிலான யோகாசன வாகையர் போட்டி - 2023 மஹராஜ் திருமண மண்டபத்தில் தமிழ்நாடு தொழில்முறை தகுதி பதிவு பெற்ற யோகா ஆசிரியர்கள் நலச்சங்கத் தலைவர் மாதவன் தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் திருநெல்வேலி, கோயம்புத்தூர், ஈரோடு, கடலூர், திருவாரூர், தஞ்சாவூர், திருச்சி, மதுரை, சிவகங்கை, திண்டுக்கல் உள்ளிட்ட 25 மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் இருந்தும் பொதுப் பிரிவில் 834 போட்டியாளர்களும் சிறப்பு பிரிவில் 124 போட்டியாளர்களும் கலந்துகொண்டனர்.

சிறப்பு வயது மற்றும் ஆண்கள், பெண்கள் பாலின அடிப்படையில் எல்கேஜி முதல் 80 வயதிற்கு மேற்பட்டவர்கள் வரை கலந்துகொண்ட இப்போட்டி மொத்தம் 40 பிரிவுகளாக நடைபெற்றது. ஒவ்வொரு பிரிவிலும் முதல் ஐந்து இடங்களைப் பிடிக்கும் போட்டியாளர்களுக்கு பரிசுகளுடன் சான்றிதழ் வழங்கப்பட்டது. பங்கேற் அனைத்து போட்டியாளர்களுக்கும் பங்கேற்பு சான்றிதழும், நினைவுப் பதக்கமும் வழங்கப்பட்டது. ஆண்கள் பிரிவில் மூன்று சேம்பியன் பட்டமும், பெண்கள் பிரிவில் மூன்று சேம்பியன் பட்டமும், ஆண்கள் பிரிவில் கரூர் மாணவன் அஜய்குமார் வாகையர் பட்டமும். பெண்கள் பிரிவில் திருப்பூர் மாணவி தேவிஸ்ரீ ஆகியோர் வாகையர் பட்டத்துடன் சைக்கில் பரிசாக வழங்கப்பட்டது.

பரிசுகளை புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் வை.முத்துராஜா, நகர்மன்ற தலைவர் திலகவதி செந்தில், முன்னாள் நகர்மன்ற தலைவர் திவ்யநாதன் ஆகியோர் வழங்கினர். விழாவில் ஒன்றியப் பெருந்தலைவர் கே.ஆர்.என்.போஸ், எஸ்.வி.எஸ். ஜெயகுமார், சாலை பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு சங்க தலைவர் மோகன்ராஜ், அரசு சிறப்பு வழக்கறிஞர் செந்தில்குமார், மகாத்மா ரவிச்சந்திரன், சேது கார்த்திகேயன், இயற்கை ஆர்வலர் பழ.கண்ணன், சுந்தரவேல, நகர்மன்ற உறுப்பினர் மை.பாலு ஆகியோர் கலந்துகொண்டு பரிசுகள் வழங்கி சிறப்பித்தனர்.

விழாவிற்கான ஏற்பாடுகளை ஆத்மா யோகா மைய நிறுவனர் யோகா ரெ.பாண்டியன், செயலாளர் புவனேஸ்வரி பாண்டியன். புதுக்கோட்டை மாவட்ட சங்க நிர்வாகிகள் மனோகர், அருண், அமுதா, அன்பரசன், அ.பாண்டியன், சங்கரநாராயணன் ஆகியோர் செய்திருந்தனர். வெற்றிபெற்றவர்களை பள்ளி முதல்வர்கள், யோகா ஆசிரியர்கள், நடுவர்கள் பெற்றோர்கள் உள்ளிட்ட அனைவரும் பாராட்டினார்கள்.

# அம்ரித் பாரத் திட்டத்தின் கீழ் தென்காசி ரயில் நிலையத்தின் வளர்ச்சிக்கு பிரதமர் அடிக்கல் நாட்டினார்




தென்காசி, ஆக.7

பிரதமர் நரேந்திர மோடி நேற்று காணொலி காட்சி மூலம் தென்காசி இரயில் நிலையத்தின் மறுவடிவமைப்புக்கு அடிக்கல் நாட்டினார். இந் நிகழ்ச்சியில் டெல்லியில் இருந்து பிரதமர் பங்கேற்றார், தென்காசி ரயில் நிலையத்தில் நடைபெற்ற விழாவில் பாராளுமன்ற உறுப்பினர் தனுஷ் எம்.குமார் தென்காசி சட்டமன்ற உறுப்பினர், எஸ். பழனிநாடார், நகர்மன்றத் தலைவர் ஆர்.சாதிர் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளுடன் நிகழ்ச்சி துவங்கியது, 508 ரயில் நிலையங்களை மேம்படுத்த அடிக்கல் நாட்டினார் தென்காசி உட்பட நாடு முழுவதும் 508 ரயில் நிலையங்களை புனரமைக்க பிரதமர் அடிக்கல் நாட்டினார். அம்ரித்பாரத்திட்டத்தின் கீழ் ரயில் நிலையங்களை மறுசீரமைக்க ரயில்வே அமைச்சகம் ரூ.24,470 கோடிக்கு மேல் ஒதுக்கியது.

தென்னகரயில்வேயில், தமிழகத்தில் 18 ரயில் நிலையங்கள், கேரளாவில் 6 ரயில் நிலையங்கள், கர்நாடகாவில் ஒரு ரயில் நிலையம் என மொத்தம் 25 ரயில் நிலையங்களில் அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

தென்காசி ரயில் நிலையத்தின் அபிவிருத்தி ரூ.7.08 கோடியில் முதற்கட்ட வளர்ச்சிப் பணிகள் நிலையத்தின் இரண்டாவது நுழைவாயிலை அபிவிருத்தி செய்தல், இரண்டாவது நுழைவாயிலில் புதிய நிலையக் கட்டிடத்தை நிர்மானித்தல், அணுகு சாலைகளை மேம்படுத்துதல், சுற்றோட்டப் பகுதியை மேம்படுத்துதல், காம்பவுண்ட் சுவர்களை புனரமைத்தல், நிலத்தோற்ற முகப்பு, பயணிகள் தொடர்பு பகுதியின் உட்புற புதுப்பித்தல் ஆகியவை அடங்கும். விழாவில் அமர் சேவா சங்கம் ராமகிருஷ்ணன் ரயில்வே கூடுதல் கோட்ட மேலாளர் டி.ரமேஷ் பாபு, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# மணிப்பூரில் குடியரசுத் தலைவர் ஆட்சி கோரி மக்கள் நீதி மய்யம் ஆர்ப்பாட்டம்



மதுரை, ஆக.07-

மணிப்பூரில் குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல்படுத்தக் கோரி மக்கள் நீதி மய்யம் சார்பில் மதுரையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மணிப்பூர் வன்முறைக்கு எதிராக நாடு முழுவதும் அரசியல் கட்சியினர், கல்லூரி மாணவர்கள் என பலரும் தொடர்ந்து போராட்டங்களை நடத்தி வருகின்றனர். அந்த வகையில், மதுரை பெத்தானியபுரம் பகுதியில் மக்கள் நீதி மய்யம் கட்சியின் சார்பில் நேற்று ஆர்ப்பாட்டம் நடந்தது. அக்கட்சியின் இளைஞரணி செயலர் கவிஞர் சிநேகன் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், மணிப்பூரில் பாஜக அரசை கலைத்துவிட்டு குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல்படுத்த வேண்டும் என்று கோஷமிடப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் காளி வேடம் அணிந்து அக்கட்சியைச் சேர்ந்த ஒருவர் பங்கேற்றார். மத்திய அரசு மற்றும் மணிப்பூர் மாநில அரசுகளுக்கு எதிராக கண்டன முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

சிநேகன் பேசும்போது, ''மணிப்பூரில் நீண்ட காலமாகவே பெண்களுக்கு எதிராக வன்முறை சம்பவங்கள் நடக்கின்றன என்ற அம்மாநில முதல்வரின் பேச்சு கண்டனத்துக்குரியது. மணிப்பூரில் மாநில அரசை கலைத்துவிட்டு, குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல்படுத்த வேண்டும்'' என வலியுறுத்தினார். இதனிடையே, ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற கட்சி நிர்வாகிகளுக்குள் சலசலப்பு ஏற்பட, அவர்களைச் சமாதானப்படுத்தச் சென்ற போலீஸாருக்கும், கட்சியினருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டதால் சிறிது நேரம் பரபரப்பு நிலவியது.



▶ மதுரை நேதாஜி ரோட்டில் உள்ள ஜுவல் ஒன் ஷோரூம் புதுப்பிக்கப்பட்டு புதுப்பொலிவுடன் கோலாகலமாக துவங்கியது. திறப்பு விழாவினை மதுரை மாநகராட்சி மேயர் வி. இந்திராணி ஷோரூமை திறந்து வைத்து குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார். ஜுவல் ஒன் நிறுவனத்தின் புதிய அறிமுகமான அமாரா கலெக்ஷன்ஸ், ஜுவல் ஒன் நியூ கலெக்ஷன்ஸ், பிரைடல் கலெக்சன், டைமண்ட் செக்சன் போன்ற பிரத்தியேக பிரிவுகளை முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு திறந்து வைத்தனர். இத்திறப்பு விழாவில் ஜுவல் ஒன் நிறுவனர் மற்றும் நிர்வாக இயக்குனர் கே.சீனிவாசன் கலந்து கொண்டு நன்றியுரை கூறினார், இந்நிகழ்வில் மதுரையின் முக்கிய பிரமுகர்களும் வாடிக்கையாளர்களும் கலந்து கொண்டனர்.

# அதிமுக - பாஜக கூட்டணியில் எந்த பிரச்சினையும் இல்லை ஹெச்.ராஜா



பெரியகுளம், ஆக.07-

"பாஜகவுக்கு எதிராக எடப்பாடி பழனிசாமி ஏதாவது பேசினால் மட்டும் நான் பதிலளிக்கிறேன்" என்று பாஜகவின் மூத்த தலைவர் ஹெச்.ராஜா கூறியுள்ளார்.

தேனி மாவட்டம் பெரியகுளத்தில் பாஜகவின் மூத்த தலைவர் ஹெச்.ராஜா செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவரிடம், பாஜக - அதிமுக கூட்டணி குறித்தும், அண்ணாமலை குறித்து அதிமுக முன்னாள் அமைச்சர்கள் கருத்து தெரிவிப்பது குறித்தும் கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர், "பாஜகவுக்கு எதிராக எடப்பாடி பழனிசாமி ஏதாவது பேசினால் மட்டும் நான் பதிலளிக்கிறேன். நான் இதை இன்றைக்கு அல்ல, பலமுறை சொல்லியிருக்கிறேன். அதிமுகவின் தலைவர் எடப்பாடி பழனிசாமி. எனவே, அவர் ஏதாவது கூறினால், ஏனென்றால் அவர்தான் டெல்லிக்கு சென்றார். அப்போது அவர்மட்டும்டெல்லிக்குச் செல்லவில்லை. சிலர், நாங்கள் டெல்லிக்குச் சென்றோம், பிரதமர் மோடி அருகில் அமர்ந்திருந்தோம். அதனால், நாங்கள் மோடி, அமித் ஷா, நட்டா இவர்கள் சொன்னால்தான் கேட்போம் என்று கூறுகின்றனர்.

அப்படியில்லை, அன்றைக்கு அண்ணாமலையும் அவர்களுடன் இருந்தார். அதிமுகவுடன் கூட்டணி என்பதை ஏற்கனவே அறிவித்தாகிவிட்டது. இடையில், திருமணங்களில், தாலி கட்டும் நேரம் வரைகூட, ஏதாவது பிரச்சினை வருகிறது. அதற்காக திருமணம் நடக்காமல் போய்விடுகிறதா? அவர்கள் குடும்பம் நடத்தாமல் போய்விடுகின்றனரா? அதுபோலத்தான். எனவே, அதிமுக - பாஜக கூட்டணி நன்றாக உள்ளது. எந்த பிரச்சினையும் இல்லாமல் சிறப்பாகவே செல்கிறது" என்று அவர் கூறினார்.

இராமநாதபுரத்தில் நடைபெறும் வாக்குச்சாவடி முகவர்கள்

# பயிற்சி பாசறை கூட்டத்தில் அனைத்து முகவர்களும் கலந்து கொள்ள வேண்டும்: ராஜா எம்எல்ஏ



சங்கரன்கோவில், ஆக.7-

தென் மண்டலத்துக்கு உட்பட்ட 19 திமுக மாவட்டங்களின் உள்ள வாக்குச்சாவடி முகவர்கள் பயிற்சி பாசறை கூட்டம் வரும் ஆகஸ்ட் 17 ம் தேதி வியாழக்கிழமை, ராமநாதபுரம், தேவிபட்டினம் சாலை, பேராவூர் என்ற இடத்தில் நடைபெறுகிறது. இந்த கூட்டத்தில் தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றுகின்றார். இந்த நிகழ்ச்சிக்கு தென்காசி வடக்கு மாவட்டத்தை சேர்ந்த சங்கரன்கோவில் மற்றும் வாசுதேவநல்லூர் சட்டமன்ற தொகுதி வாக்குச்சாவடி முகவர்கள் இந்த பயிற்சி பட்டறைக்கு செல்வதற்கான ஆலோசனைக் கூட்டம் சங்கரன்கோவிலில் வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்எல்ஏ தலைமையில் நடந்தது.

இதில் பேசிய ராஜா எம்எல்ஏ மாநில, மாவட்ட நிர்வாகிகள் ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் இரண்டு சட்டமன்ற தொகுதியிலும் உள்ள வாக்குச்சாவடி முகவர்களை அழைத்து வர வேண்டும் எனவும், இது தொடர்பாக இரண்டு சட்டமன்ற தொகுதிகளிலும் ஒன்றிய நகர பேரூர் கழக வாக்குச்சாவடி முகவர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட வேண்டும் எனவும், தலைமை கழக நிர்வாகிகள் ஒன்றிணைந்து செயல்பட்டு தென்காசி வடக்கு மாவட்டத்தில் இருந்து அனைத்து வாக்குச்சாவடி முகவர்களும் பயிற்சி பாசறையில் கலந்து கொள்ள வேண்டும் எனவும்,

மேலும் இந்தியாவின் மூத்த தலைவர் முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் 5 வது நினைவு நாளை முன்னிட்டு தமிழக முதல்வர் உத்தரவின் படி விளையாட்டுப் போட்டிகள், கருத்தரங்கங்கள், கலைஞரின் சாதனை விளக்ககூட்டங்கள், ஒன்றிய நகர பேரூர் கழகங்களில் கழககொடி ஏற்றுதல், கட்சி மூத்த முன்னோர்களுக்கு பொற்கிழி வழங்குதல், உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும் எனவும் பேசினார். இதில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் யூஎஸ்டி சீனிவாசன், பரமகுரு, மாவட்ட அவைத்தலைவர் பத்மநாபன், மாவட்ட துணை செயலாளர்கள் ராஜதுரை புனிதா, மாவட்ட பொருளாளர் சரவணன், ஒன்றிய செயலாளர்கள் லாலாசங்கரபாண்டியன், கடற்கரை, பொன்முத்தையா பாண்டியன், பூசைபாண்டியன், ராமச்சந்திரன், மதிமாரிமுத்து, கிறிஸ்டோபர், சேர்மத்துரை, வெற்றி விஜயன், பொதுக்குழு உறுப்பினர்கள் வேல்சாமி பாண்டியன், சங்கரன்கோவில் மாரிச்சாமி, பராசக்தி, வெள்ளத்துரை, நகர செயலாளர்கள் சங்கரன்கோவில் பிரகாஷ், புளியங்குடி அந்தோணிசாமி பேரூர் கழகச் செயலாளர்கள் ரூபி பாலசுப்ரமணியன், மாரிமுத்து ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அமமுக பொதுச்செயலாளராக டிடிவி தினகரன் மீண்டும் தேர்வு



சென்னை, ஆக.07-

அமமுக பொதுச்செயலாளராக டிடிவி தினகரன் மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் பொதுக்குழுக் கூட்டம் இன்று சென்னையில் நடைபெற்றது. இக்கூட்டத்தின்போது கட்சியின் புதிய நிர்வாகிகளுக்கான தேர்தல் நடைபெற்றது.

இதுகுறித்து கட்சியின் தலைமைக்கழகம் வெளியிட்டுள்ள குறிப்பு: ''கழக பொதுச்செயலாளராக டிடிவி தினகரன், கழக தலைவராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.கோபால், கழக துணைத்தலைவராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். அன்பழகன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள்.'' இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, காவிரியின் குறுக்கே மேகதாது அணை கட்டும் கர்நாடக அரசின் முயற்சியை மேம்போக்காகக் கையாளும் திமுக அரசுக்குக் கண்டனம், தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றாத திமுக அரசுக்குக் கண்டனம், பெட்ரோல், டீசல் விலையைக் குறைத்திட மத்திய அரசுக்கு வலியுறுத்தல், பரந்தூர் விமான நிலையத் திட்டத்தைக் கைவிட வலியுறுத்தல், என்எல்சி சுரங்க விரிவாக்கத் திட்டத்தைக் கைவிட வலியுறுத்தல் உள்ளிட்ட 14 தீர்மானங்கள் பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்டன.

# கறம்பக்குடியில் குதிரை மற்றும் மாட்டுவண்டிப் பந்தயம்





கறம்பக்குடி, ஆக.07-

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடியில் துரை விஜயரகுநாத பல்லவராயர் நினைவு நாளையொட்டி குதிரை, மாட்டு வண்டி பந்தயம் நடைபெற்றது. மாட்டு வண்டி பந்தயம் பெரிய மாடு, சிறிய மாடு என இரு பிரிவுகளாக நடைபெற்றது. போட்டியில் புதுக்கோட்டை, திருச்சி, சிவகங்கை, தஞ்சை, மதுரை உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து மாட்டு வண்டிகள் பங்கேற்றன. பெரிய மாடு பிரிவில் 6 மாட்டு வண்டிகளும், சிறிய மாடு பிரிவில் 18 மாட்டு வண்டிகளும் பங்கேற்றன.

கறம்பக்குடி கருப்பர் கோயிலில் இருந்து துவார் சாலையில் சுமார் 10 கி. மீ தூரம் நிர்ணயிக்கப்பட்ட பந்தய தூரத்தை கடந்து முதல் மூன்று இடங்களை பெற்ற மாட்டு வண்டிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

பெரிய மாடு பிரிவில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாட்டு வண்டி உரிமையாளர்களுக்கு முறையே ரூ. 25 ஆயிரம், ரூ. 20ஆயிரம், ரூ. 15ஆயிரம் வழங்கப்பட்டன. சிறிய மாடு பிரிவில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாட்டு வண்டிகளின் உரிமையாளர்களுக்கு முறையே ரூ. 20 ஆயிரம், ரூ. 15 ஆயிரம், ரூ. 10 ஆயிரம் வழங்கப்பட்டன.

குதிரை வண்டிப் பந்தயத்தில் 20 குதிரை வண்டிகள் பங்கேற்றன. அதில், முதல் மூன்று இடங்களை பெற்ற உரிமையாளர்களுக்கு முறையே ரூ. 20ஆயிரம், ரூ. 15ஆயிரம், ரூ. 10 ஆயிரம் பரிசுகள் வழங்கப்பட்டன. போட்டியை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமானோர் பார்வையிட்டனர், கறம்பக்குடி போலீஸார் பாதுகாப்பு பணிகளை மேற்கொண்டனர்.

# கடலூர் தென் பெண்ணையாற்றில் கை துப்பாக்கி கண்டெடுப்பு: போலீஸார் விசாரணை



கடலூர், ஆக.07-

கடலூர் தென்பெண்ணை ஆற்றில் இருந்துகைதுப்பாக்கிஒன்று கண்டெடுக்கப்பட்டது. இது குறித்து போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கடலூர் ஆல்பேட்டை அருகே உள்ள தென்பெண்ணை ஆற்றில் நேற்று (ஆக.6) சிறுவர்கள் சிலர் குளித்துக் கொண்டிருந்தனர். அப்போது அதில் ஒரு சிறுவனின் கையில் கை துப்பாக்கி ஒன்று கிடைத்துள்ளது. இதனால் அந்த சிறுவர்கள் பதற்றம் அடைந்துள்ளனர். பின்னர் அவர்கள் அந்த கைதுப்பாக்கியை கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் காவலுக்கு நின்ற போலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

இது குறித்து தகவல் அறிந்த கடலூர் புதுநகர் போலீஸ் இன்ஸ்பெக்டர் குருமூர்த்தி தலைமையிலான போலீஸார் ஆட்சியர் அலுவலகபகுதிக்குசென்று அந்த துப்பாக்கியை கைப்பற்றினர். அந்த துப்பாக்கி சாதாரணமாக பயன்படுத்தக்கூடிய ஏர் பிஸ்டல் வகை துப்பாக்கி என்பது தெரியவந்தது. மேலும் அந்ததுப்பாக்கியில் குண்டுகள் எதுவும் இல்லை என்பதும் தெரிய வந்தது.

ஏர் பிஸ்டல் துப்பாக்கி என்பது போலீஸார் துப்பாக்கி சுடும் பயிற்சி மேற்கொள்ளும் போது பயன்படுத்தக்கூடியது என போலீசார் தெரிவித்துள்ளனர். இதனை தொடர்ந்து புதுநகர் போலீஸார் அந்த துப்பாக்கியை பெண்ணையாற்று பகுதிக்கு உட்பட்ட ரெட்டிச்சாவடி காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். ரெட்டிச்சாவடி போலீஸார் அந்த துப்பாக்கியை பயன்படுத்தியது யார்? அது எவ்வாறு தென்பெண்ணை ஆற்றில் வந்தது என்பது குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# தமிழின் சங்க இலக்கியங்கள் இந்தியாவுக்கு மிகப்பெரிய பொக்கிஷம்

# பாகிஸ்தானில் ரயில் தடம்புரண்டு விபத்து: 22 பேர் உயிரிழப்பு





# பூங்குடி வெடி விபத்து பலி எண்ணிக்கை 3 உயர்வு நிவாரணம் அறிவித்தார் முதல்வர்


சென்னை / புதுக்கோட்டை | 07.08.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை
வரலாறு
நாளிதழ்

07.08.2023 திங்கள்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

உமறுப் புலவர் , தமிழகப் புலவர் (பி.1642)



முகம்மது ஷா , இந்தியாவின் முகலாயப் பேரரசர் (பி.1702) (இ.1948)



ஒசி அபேகுணசேகரா , இலங்கை அரசியல்வாதி (பி.1950) (இ.1994)



மகேஷ் தத்தானி , இந்திய எழுத்தாளர், திரைப்பட இயக்குநர், நடிகர் (பி.1958)



## இன்றைய நினைவு நாள்

இரவீந்திரநாத் தாகூர் , நோபல் பரிசு பெற்ற இந்தியக் கவிஞர் (பி.1861) (இ.1941)



வாணிதாசன் , புதுவைத் தமிழறிஞர், கவிஞர் (பி.1915) (இ.1974)



மு. கருணாநிதி , தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் (பி.1924) (இ.2018)

